ஏற்பட்டிருக்காது' என்று நிபுணர் குழுவினர் முணுமுணுத்தனர். ஆய்வுப் பணியை நிறைவு செய்துவிட்டு வந்த நிபுணர் குழுவினரை பொது மக்கள் பலர் சூழ்ந்து கொண்டு கேள்வி கேட்க ஆரம்பித்தனர்.

"ராஜகோபுரத்தில் விரிசல்கள் நிறைய இருக்கிறதே அதனால் கோபுரத்திற்கு ஆபத்து ஏற்படுமா?" என்றார் திருநாவுக்கரசு என்ற பக்தர் ஒருவர். "அந்த விரிசல்கள் 1992ஆம் ஆண்டு ஏற்பட்டவை. அதற்குப் பிறகு புதிய விரிசல்கள் ஏற்படவில்லை. கோபுரத்தின் அடிப்பகுதியில் கல் பிதுக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் ஆபத்து ஒன்றுமில்லை" என்றார் நிபுணர் குழுவில் இடம் பெற்றிருந்த ஸ்தபதி முத்தையா. உடனே சுரேஷ் என்கிற பக்தர், "என்னங்க சார் காமெடி பண்ணுறீங்க. ஒரு கட்டிடத்துக்கு மிக முக்கியமே அடிமட்டம் ஸ்ட்ராங்கா இருப்பதுதான். நீங்க அடிப்பகுதியில் உள்ள கல்பிதுக்கத்தால் ஆபத்து ஏற்படாது. பயப்படத்தேவையில்லைன்னு சொல்றீங்க. வடிவேலு பாணியில் சொல்வதென்றால் 'பேஸ்மெண்ட் வீக்... பட் பில்டிங் ஸ்ட்ராங் என்கிறீர்களா?" என்று ஸ்தபதி முத்தையாவை மடக்கினார். இன்னொரு பக்தரான ரவி என்பவர், "ராஜகோபுரத்திற்கு ஆபத்து இல்லை என்கிறீர்கள்... அப்படியானால் அதை எழுத்துப் பூர்வமாக எழுதிக் கொடுப்பீர்களா?" என்றார். உடனே சுதாரித்துக் கொண்ட நிபுணர் குழுவினர், "அப்படியெல்லாம் எழுதித் தர முடியாது.." என்றனர் கோரஸாக. உடனே பொதுமக்கள் தரப்பில் "அப்புறம் ஏன் புதிதாக விரிசல் இல்லை, கோபுரத்திற்கு ஆபத்து இல்லை என்று பதில் சொல்கிறீர்கள்?" என்று சத்தம் போட்டனர்.

இந்தக் குழுவில் ஒருங்கிணைப்பாளராக வந்திருந்த அறநிலையத்துறை இணை ஆணையர் ஹரி பிரியா நிபுணர் குழுவினரை அவசரமாக அங்கிருந்து அழைத்துச் சென்றார். நிபுணர் குழுவினர் பத்திரிகையாளர்களிடம் தெளிவாக எதையும் பேச விடாமலும் பார்த்துக் கொண்டார் ஹரிபிரியா.



"ராஜகோபுரத்தை சுற்றி ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள் நிறைய உள்ளன. ஹோட்டல்களின் சமையலறை ராஜகோபுர சுவரை ஒட்டி அமைந்துள்ளன. தொடர்ந்து, சமையலறையின் அனல் ராஜகோபுர சுவர்களை தாக்குவதால் வெப்பத்தின் காரணமாக கோபுர சுவர்களில் விரிசல் ஏற்படலாம். இதுவல்லாமல் ஹோட்டல், லாட்ஜ்களின் தண்ணீர் தேவைக்காக ராட்சத போர் வெல்கள் ராஜகோபுரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டு அவை நாள்தோறும் நிலத்தடி நீரை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. இவற்றாலும் கோபுரத்தின் பழமையான அஸ்திவாரத்திற்கு பாதிப்பு ஏற்படலாம்" என்கின்றனர் கட்டிடவியல் நிபுணர்கள்.

"முதல்கட்டமாக இதுபோன்ற செயல்களுக்குத் தடைவிதிக்க வேண்டும். பிறகு கோபுரத்தின் விரிசல்களை சரி செய்து கட்டுமானத்தை பலப்படுத்த வேண்டும்' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



நாம் ரங்கநாதர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் தியாகராஜனிடம் பேசினோம். "நிபுணர் குழுவினர் 15 நாட்களில் ஆய்வறிக்கையை அரசாங்கத்திடம் சமர்பிப்பார்கள். அந்த அறிக்கையைப் பெற்ற பிறகு அரசு என்ன விதமான உத்தரவுகளைப் பிறப்பித்தாலும் அதை செய்து முடித்து ராஜகோபுரத்தை பலப்படுத்துவோம். கோபுரத்தை சுற்றி உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் எந்த இடையூறு வந்தாலும் அதை முறியடித்து செயலாற்றுவோம்" என்றார்.

❖